# சர்வதேச தமிழாராய்ச்சி கட்டிடத்துக்கு 40 ஏக்கர் காணி


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 149
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 26 ஜமா. அவ் 5 வெள்ளிக்கிழமை [10-7-70]



பொன் 7199

பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.



அன்டன்
அலுமினியம் லூவர்ஸ்,
ஸ்லொட்டட்
ஆங்கிள் அயன்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130


## 50 லட்சம் ரூபாவும் தமிழ்நாடு அரசு வழங்கும்

சென்னை, ஜூலை 9

தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேசக் கழகக் கட்டிடம் அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு 40 ஏக்கர் நிலத்தையும் 50 லட்சம் ரூபா பணமும் கொடுக்கவிருக்கின்றது.

இத்தகவலை தமிழ்நாடு கல்விஅமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று வெளியிட்டார்.

தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேசகழக கட்டிடத்தை சென்னையில் நிறுவுவதற்கான செலவுகளில் கணிசமான அளவை தமிழ்நாடு அரசாங்கமேபொறுப்பேற்க விரும்புவதாகவும், திரு நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

பிரஞ்சுத் தலைநகரான பாரிஸில் இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் 3-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தமிழ்நாடு பிரதிநிதிகள் குழு நிதி அமைச்சர் திரு. மதியழகன் தலைமையில் நாளையதினம் சென்னையிலிருந்து புறப்படவிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று பாரிஸிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குப் புறப்பட்டுச் சென்றதாக செய்தி கிடைத்திருக்கின்றது. சர்வதேசத் தமிழராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக திரு. கருணாநிதி மீண்டும் பாரிஸுக்கு உரிய காலத்தில் வந்து சேர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கருணாநிதி பாரிஸில் பிரஞ்சு கலாசார அமைச்சருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். தமிழ்நாட்டுடன் மேலும் கலாசார உறவுகளை வளர்த்துக் கொள்ள பிரான்ஸ்விரும்புவதாக பிரஞ்சு அமைச்சர் திரு. எட்மண்ட் மைக்கேல் திரு. கருணாநிதியிடம் தெரிவித்துள்ளார்

திரு கருணாநிதி இன்று பாரிஸிலுள்ள யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் துணைடைரக்டர் ஜெனரல் திரு மல்கோம் ஆதிசேஷையாவுடன் பகல் உணவு அருந்தினார். திரு. ஆதிசேஷையா திரு. கருணாநிதிக்கு யுனெஸ்கோ விவசாயப் பதக்கம் ஒன்றை வழங்கினார். யுனெஸ்கோ நிலயத்திலுள்ள அதிகாரிகளையும் திரு. கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

தமிழ்நாட்டிலுள்ள பிரதான தஞ்சை கோவிலையும் அதுபோன்ற மற்றவைகளையும் யுனெஸ்கோ புனரமைப்புத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று திரு கருணாநிதி யுனெஸ்கோ அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

## பிரிவிகவுன்சில் தீர்ப்பு வந்தபின்

# "பகுதி மக்களுடன் கலந்து பேசி பிரச்னைக்கு தீர்வு காண்பேன்"

## "எம் நியமனத்திற்கு உதவும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு தருவோம்"

### புலவர் மன்றத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

''அர்த்தராத்திரியிலே அமவாசையிருளிலே ஆழ்கடலிலே வீழ்ந்து ஜீவமரணப்போராட்டம் நடத்திக்கொண்டிருப்பவன் தன்னைக் காப்பாற்ற வருகின்ற கப்பல் எந்நாட்டுக் கப்பலென்று ஆராய்வதில்லை. கையதுகொண்டு மெய்யது பொத்தி கார்த்திகைமாதக் கடுங்குளிரில் நடுநடுங்கிக் கொண்டிருப்பவன் தனக்குடன் தீர்த்துவைப்பதில் ஆர்வம் காட்டும் இன்றைய அரசாங்கத்திற்கு 13 புலவர்களுக்கு வேலை வழங்குவது பெரிய பிரச்னையல்ல வென்றும் அவர்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு முயற்சித்தால் வெற்றிநிச்சயம் கிடைக்குமென்றும் இது சம்பந்தமாக புலவர் மன்றம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் தமது யாழ் இளைஞர் கழகம் மனப்பூர்வ

## வடமாகாண ஆசிரியர்சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 55-வது பொதுக் கூட்டத்தில் நாளை சனிக்கிழமை காலை மல்லாகம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சகல தோட்டப்பட்சாலைகளையும் அரசாங்கம் கையேற்கவேண்டுமென்றும் அப்பாடசாலைகளில் ஆசிரியர்சேவை செய்த காலத்தைச் சம்பள உயர்வுக்கும் சேவைமூப்புக்கும் இளைப்பாற்றுச்சம்பளத்துக்கும் அங்கீகரிக்கவேண்டுமென்றும் கல்வியமைச்சரைக் கோருக் தீர்மானம் உட்படப்பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப் படவிருககின்றன.

### யாருடையது?

## பொலிசாருக்கு 'சுந்தரர்' எழுத்து மூலம் வாக்குறுதி

### பொலிஸ் காவலை வாபஸ் பெறவும் கோரிக்கை

"மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான வழக்கின் பிரிவுக் கவுன்சில் தீர்ப்பு வந்தபின் அப்பகுதி மக்களை கலந்தாலோசித்து இப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண்பேன்" என்று திரு. வி. சுந்தரலிங்கம் எழுத்துமூலம் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்கு நேற்று தெரிவித்தார். ஆலோசனையை பெறுவதற்காக இதனை வடபகுதி பொலிஸ் அதிபர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மூலம் அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாவிட்டபுரம் பகுதியிலுள்ள பொலிஸாரை வாபஸ்... அத...ன் கள் நடைபெறாமல் பார்த் ... நடைபெறுமென நான் உறுதியளிக்கின்றேன் ... அசம்பாவிதங் ... பெற்ற காலத்தில் ... யப்பிரவேச பயமுறுத்தல் ...

வழிபட ஹரிசனர் வந்தால் அவர் உண்மையான ஹரிசனர் என்பதை அறிந்தபின் அவரின் முன்னேர் நின்று வணங்கிய

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள்விபரம் பின்வருமாறு:

முதலாவது பரிசு
22 C 0006 ரூபா 77,030

இரண்டாம் பரிசு
21 Z 0469 ரூபா 30,812

மூன்றாவது பரிசு

| | |
|---|---|
| 21 N 0368 | 02 N 0595 |
| 29 N 0793 | 14 N 0071 |
| 30 N 0200 | 08 O 0162 |
| 01 O 0549 | 19 O 0847 |
| 10 O 0806 | 06 O 0066 |
| 02 O 0522 | 25 P 0926 |
| 17 P 0249 | 32 P 0866 |
| 08 P 0450 | 14 P 0893 |
| 05 Q 0119 | 05 Q 0210 |
| 17 Q 0932 | 29 Q 0963 |
| 16 R 0171 | 11 R 0162 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்ற வருகின்ற கப்பல் எந்நாட்டுக் கப்பலென்று ஆராய்வதில்லை. கையதுகொண்டு மெய்யது பொத்தி கார்த்திகைமாதக் கடுங்குளிரில் நடுநடுங்கிக் கொண்டிருப்பவன் தனக்கு கிடைக்கும் மேலாடை கருப்பா சிகப்பா என்று கருதுவதில்லை. அதுபோலத்தான் நாங்களும் எங்களுடைய வாழ்க்கையில் விடிவுஏற்படுத்தும்வகையில் எங்கள் ஆசிரிய நியமனத்திற்கு உதவ எந்தக் கட்சிமுன்வருகிறதோ ஏழெட்டு ஆண்டுக்காலமாக நாங்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்களுக்கு ஒருமுடிவு கட்டஎந்தக்கட்சி முனைந்துவருகிறதோ, அந்தக் கட்சியை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். எந்த நன்றியைக் கொன்றாலும் கொல்லுவோம். அவர்கள் செய்த நன்றியை ஒரு போதும் கொல்லமாட்டோம்'.

இவ்வாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று ஆசிரிய நியமனம் பெற்றிருக்கும் புலவர்களின் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய புலவர் அ. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் அண்ணா சொற்பயிற்சி மன்றத்தில்நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய யாழ் இளைஞர் கழகத்தலைவர் திரு. ஆர். இரத்தினகோபால் எத்தனையோ தீராத பிரச்னைகளையெல்லாம் உடனுக்குடன் தொடர்புகொண்டு முயற்சித்தல் வெற்றிநிச்சயம் கிடைக்குமென்றும் இது சம்பந்தமாக புலவர் மன்றம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் தமது யாழ் இளைஞர் கழகம் மனப்பூர்வமான ஆதரவைத் தரத் தயாராக விருக்கிறதென்றும் கூறினார்.

இறுதியாக ஐக்கிய முன்னணியின் தமிழ்ப் பிரமுகர்கள், திரு. வ. பொன்னம்பலம், திரு. மா. துரைராசா. மூலம் கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன்முகமச் துணைக்கல்வியமைச்சர் திரு. துடாவை ஆகியோரைப் பேட்டிகண்டு வரும் நிதிமாதத்தோடு புலவர்களுக்கு நியமனம்வழங்க வேண்டுமென்று வற்புறுத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## பாடசாலையில் ஒரு பகுதி தீக்கிரை

யாழ்ப்பாணம், வெள்ளி

சண்டிலிப்பாயிலுள்ள ஒரு பாடசாலையின் ஒருபகுதி நேற்றிரவு தீக்கிரையானது. சில தினங்களுக்கு முன்நடந்த குருபூசையொன்றில் நடந்தசம்பவம் ஒன்றின் எதிரொலியாக இது நடைபெற்றிருக்கலாமெனச் சங்கானைப்பொலிசுக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். பாடசாலையைச்சேர்ந்த ஓர் ஆசிரியையும் அவர்கள் விசாரணை செய்தனராம்.

அங்கீகரிக்கவேண்டுமென்றும் கல்வியமைச்சரைக் கோருக் தீர்மானம் உட்பட்டபல. தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப் படவிருக்கின்றன,

## யாருடையது?

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட 3 கூப்பன்கள் சி. திருநாவுக்கரசு என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## நியமனம்?

யாழ்ப்பாணம், வெள்ளி

வெளியூர் பாடசாலையில் ஆசிரியராக இருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஷகடி வைத்தியர் திரு.க. சிற்றம்பலத்தை மீண்டும் யாழ்ப்பாணத்து பாடசாலையிலேயே நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் திரு. பதியுதீன் மஹ்மூத் உறுதியளித்துள்ளார்.

இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் யாழ். கிளை திரு. சிற்றம்பலத்தை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யவேண்டுமென்றும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அவர்ஆற்றிவந்தசேவை தொடர்ந்து கிடைக்க மேண்டுமென்றும் ஏகமனதாக தீர்மானித்து, கல்வி அமைச்சரிடம் தீர்மானத்தைக் கையளித்தது.

## இன்று

யாழ்ப்பாணம் வெள்ளி

இன்று யாழ். கேட்டை முனீஸ்வரன்ஆலயத்தில்பஞ்சதந்தோதக அபிசேகவிழா நடைபெறும். திரு. மு. வர்ணகுலசிங்கம்'சிதம்பரமகிமை' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது ஆண்டு விழா இன்று மாலை யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கலவான எம். பி, திரு, சரத்முத்தெட்டுகம சிறப்புச்சொற்பொழி வாற்றுவார்.

0 0 0

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் இப்பகுதிப் பாடசாலைகளுக்கு இடையே வருடந்தோறும் நடாத்தப் பட்டுவரும் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 8-ம் திகதி நெல்லியடிமத்தியமகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகியது.

இன்று இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

லுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாவிட்டபுரம் பகுதியிலுள்ள பொலிஸாரை வாபஸ் பெறும்படியும், அத ன் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதாகவும் திரு. ஸி சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

வருடாந்தஉற்சவதினத்தில் ஆலயத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாதபடி கடமையாற்றியதற்கு பொலிஸாருக்கு திரு. ஸி சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துளளார்.

திரு. ஸி சுந்தரலிங்கம் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:- இனிமேலும் கோவில் பகுதிகளில் பொலிஸார் இருக்கவேண்டுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. பொலிஸார் வாபஸ் பெற்றபின்னர் பூசைகள் நடைபெறும். இனிமேல் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாதென நான் உறுதியளிக்கின்றேன்.

கும்பாபிஷேகம் நடை பெற்ற காலத்தில் ஆலயப்பிரவேச பயமுறுத்தல் இருந்த போதிலும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆதலால் 1966-ம் ஆண்டுக்கு முன்னர் நடந்தது போல வழிபாடுகள் நடைபெற வழிசெய்ய வேண்டும்:

மீண்டும் பூசைகள் நடைபெறும்போது ஹரிஜனர்கள் ஆலயத்திற்குள் வழிபட வந்தால் என்ன செய்வீர்கள்? என வடபகுதி பொலிஸ் அதிபர் ஒரு கேள்வியைக் கேட்டார்.

வழிபட ஹரிசனர்வந்தால் அவர் உண்மையான ஹரிசனர் என்பதை அறிந்தபின் அவரின் முன்னோர் நின்று வணங்கிய வெளிமண்டபத்தில்நின்றுவழிபடும்படி பணிவாக கேட்டுக் கொள்வேன் அவர் உள்ளே சென்றுவணங்கப்போவதாக கூறினால் அங்குள்ள தொண்டர்கள் மூலம் வாசல்க்கதவை பூட்டச் சொல்வது பொலிசாருக்கு அறிவிப்பேன் என்று திரு சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட முழு விபரங்களும் அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது

# பொலிஸ் பாதுகாப்பு நீடிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கோவில் பகுதிகளில் இன்னும் சில காலத்திற்கு தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு இருக்கவேண்டுமென சிறுபான்மைத் தமிழர் மகா சபை தலைவரும், நியமன எம். பி. யுமான திரு. எம். சி. சுப்பிரமணியம் பிரதமரிடம நேற்று கோரியுள்ளார்.

சிறுபான்மை சமூகத்தவரின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட உடனடியாக நடவடிக்கை எடுத்த அரசாங்கத்திற்கு அவர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்திற்கு விரைவில் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்றும், அவர் கோரியுள்ளார்.

சிறுபான்மை தமிழர் மகாசபை பொதுக் காரியதரிசி திரு. வி. ஏ. தங்கராசா, நிர்வாகக் காரியதரிசி திரு எஸ் செல்லையா, தனாதிகாரி திரு இராசையா மற்றும் உறுப்பினர்கள் நேற்று மாவிட்டபுரத்திற்கு சென்று கைகால் கழுவியபின் உள்ளே சென்று வழிபட்டனர்.

பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் மற்றும் பல பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான சிறுபான்மைத் தமிழர் மகா சபை உறுப்பினர்கள் மாவிட்டபுரம்ஆலயத்திற்குள்சென்று வழிபட்டனர்.

மாறு:

முதலாவது பரிசு

22 C 0006 ரூபா 77,030

இரண்டாம் பரிசு

21 Z 0469 ரூபா 30,812

மூன்றாவது பரிசு

02 H 0777 ரூபா 7,703

தலா 385 ரூபா 15 சதம் பெறும் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட் வருமாறு:

| | |
|---|---|
| 28 A 0506 | 01 A 0940 |
| 01 A 0583 | 27 A 0597 |
| 29 A 0560 | 28 B 0901 |
| 05 C 0680 | 27 C 0112 |
| 28 C 0403 | 07 C 0130 |
| 06 C 0129 | 18 C 0833 |
| 03 D 0872 | 25 D 0564 |
| 24 D 0598 | 02 E 0334 |
| 06 E 0226 | 23 F 0965 |
| 22 F 0705 | 14 F 0112 |
| 18 F 0954 | 44 F 0574 |
| 28 F 0591 | 31 G 0188 |
| 12 G 0449 | 01 G 0497 |
| 03 G 0299 | 15 G 0981 |
| 20 G 0461 | 02 H 0349 |
| 26 H 0582 | 08 J 0604 |
| 08 J 0654 | 21 J 0843 |
| 28 J 0711 | 21 J 0260 |
| 20 K 0576 | 31 K 0559 |
| 25 K 0791 | 26 L 0721 |
| 31 L 0422 | 31 L 0119 |
| 27 M 0644 | 32 M 0412 |
| 34 M 0061 | 27 M 0644 |
| 32 M 0412 | 34 M 0061 |
| 03 M 0434 | 24 M 0698 |
| 10 M 0474 | 16 N 0696 |
| 22 N 0013 | 17 N 0512 |
| 10 O 0806 | 06 O 0066 |
| 02 O 0522 | 25 P 0926 |
| 17 P 0249 | 32 P 0866 |
| 08 P 0450 | 14 P 0893 |
| 05 Q 0119 | 05 Q 0210 |
| 17 Q 0932 | 29 Q 0963 |
| 16 R 0171 | 11 R 0162 |
| 12 R 0918 | 27 S 0461 |
| 03 S 0186 | 07 S 0617 |
| 33 T 0445 | 08 T 0421 |
| 07 T 0043 | 29 U 0242 |
| 23 U 0652 | 26 U 0465 |
| 29 V 0752 | 25 V 0592 |
| 23 V 0329 | 17 V 0911 |
| 06 W 0425 | 01 W 0909 |
| 30 W 0678 | 20 X 0424 |
| 13 X 0567 | 16 X 0253 |
| 22 X 0967 | 26 Y 0859 |
| 29 Y 0660 | 25 Y 0022 |
| 10 Z 0914 | 28 Z 0470 |


04 Z 0321

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்)

## பூநகரி கி. ச. தேர்தல்

பூநகரி, வியாழன்

ஏழுவட்டாரங்களைக் கொண்ட கிளிநொச்சி பட்டின சபையின் தேர்தல் வெகு விரைவில் நடைபெறவிருக்கிறது. தேர்தல் மனுக்கள் இம்மாதம் 16-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பட்டினசபை இப்போது ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்குவது குறிப்பிடத்தக்கது. 7 வட்டாரங்களிலும் த. அ. கட்சியும், தமிழ்க்காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் போட்டியிடும் எனத் தெரிகிறது. ஐக்கிய முன்னணி இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களில் மட்டும் போட்டியிட்டு மற்ற வட்டாரங்களில் த. காங்கிரசுக்கு ஆதரவளிக்கும் என்றும் கூறப்படுகிறது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் "ஸ்கோர் போட்"டை முன்னாள் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர் இன்று மாலை 4 மணிக்குத் திறந்து வைக்கிறார். தேசிய லொத்தர் சபை டைரக்டரும், மத்திய கல்லூரி பழைய மாணவருமான திரு. பி. சிவரெத்தினம் காலஞ்சென்ற தமது தகப்பனார் திரு. வி. பொன்னம்பலத்தின் நினைவாக இந்தக் கட்டடத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

படம்: 'சிட்டு'

வல்லை ஆலை விவகாரம்

# இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடி

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்லையில் நிறுவப்பட்டுள்ள இலங்கை நூற்றல் ஜவுளி ஆலை லிமிட்டட் தலைவருக்கும் செயலாளருக்கும்எதிராக பருத்தித்துறை மாவட்ட நிதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமனு மீதான இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது,

இம் மனுவில் இலங்கை நூற்றல் ஜவுளி ஆலைலிமிட்டட் தலைவரான தொண்டமனாற்றைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராஜசேகரம் செயலாளரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஞானமூர்த்தி ஆகியோர் குறிப்பிட்ட காணியில் பட்டுத்தறி நிறுவினால் கம்பெனியின் நலனையும் முன்னேற்றத்தையும் பாதூரமாகபாதிக்கும் என்ற காரணத்தால்நிறுவக்கூடாதென தடைஉத்தரவு போடும் படி பங்காளிகளான இளவாலையைச் சேர்ந்த பி. எஸ். இராசநாயகம் நீர்வேலியைச்சேர்ந்த அத்தியார் சின்னத்துரை ஆகியோர் கோரியிருந்தனர்.

இம் மனு மீதான விசாரணை பருத்தித்துறை மாவட்ட நிதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

நீதிபதி தீர்ப்பளிக்கையில் அக்காணியில் தறி நிறுவுவதென்று ஆலை நிர்வாகிகள் செய்த முடிவு மனுதாரர்களுக்கு அச்சத்தை கொடுத்திருப்பதாகத் தோன்றுகிறதென்றும் அந்தஅச்சம் உண்மையானதாக கருதப்படவில்லையென்றும், கம்பெனியின்பரிபாலனத்தை நடத்தும் போது இவ்வேளை நிர்வாகிகளின் முடிவு சிலருக்குத்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'சட்டம், பலாத்காரம் மூலம் தீர்வு காணமுடியாது'

## ஆலயப் பிரவேசக்குழு அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்ட மூலமோ, பலாத்காரம் மூலமோ பொலிசாரின் உதவியுடன் ஆலயப் பிரவேசத்திற்கு நிரந்தர தீர்வு காண முடியாது. ஆலய ஆதீன கர்த்தா, உபயகாரர், தர்மகர்த்தாக்கள் தாங்களாகவே ஆலயத்தை சகலருக்கும் பாகுபாடின்றி திறந்துவிட்டாலே இப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண முடியும். சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் இவர்களின் மனதை மாற்ற முயல வேண்டும்.

யாழ்ப்பாண ஆலயப் பிரவேசக்குழுச் செயலாளர் அட்வக்கேட் திரு. எஸ். பொன்னையா நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நல்லூர் கந்தசுவாமி கோவில், தொண்டமானாறு செல்வச்சந்நிதி, மட்டுவில் பன்றித்தலைச்சி ஆகிய பெரும் கோவில்களில் தர்மகர்த்தா, உபயகாரர்களின் சம்மதத்துடனேயே ஆல

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த ரெக்ஸ்ரைல் பிறின்டேர்ஸ், டை மிக்ஷேர்ஸ், ஸ்கிறீன் மேக்கர்ஸ், ஆட்டிஸ்ற் ஆகியோர் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல 3155 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் 3155

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்குப் பெண்பிள்ளைகளும், பிணைப்பணம் கட்டக்கூடிய (பெண்) மனேஜர் ஒருவரும் சைக்கிளில் வியாபாரம் செய்வதற்கு ஆண்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3167

ஆசிரியர்:
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள போதனு நிலையத்திற்கு பௌதிக, இரசாயனம் ஆகிய பாடங்களுக்குப் போதனுசிரியர் ஒருவர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். 3166

சமையல் வேலை நன்கு தெரிந்த நடுத்தர வயதுள்ள ஆண் அல்லது பெண் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு: டாக்டர் A. பொன்னம்பலம், ஆனைக்கோட்டை. 3162

### விற்பனைக்கு

நவாலியில்:
கட்டடத்திற்குரிய காணி 6 பரப்பு நவாலி மகாவித்தியாலயத்துக்கு முன்னுல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. நடராசா, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3163

தோட்டாக்கள்:
எம்மிடம் துவக்குத் தோட்டாக்கள் விற்பனைக்குண்டு. றெட் அன்ட் ருன்ஸ் போட் லிமிட்டெட், 47, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3169

அரசாங்கக் கேள்விகள்
சுகாதாரத் திணைக்களம்
என் 2063-1970 | 71-ம் நிதியாண்டில் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள வைத்திய நிலையங்களுக்கு இரும்புப் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான கேள்விகள் 28-7-70-ந் திகதி காலை 10 மணிக்கு முடிவடையும்.
மேலதிக விபரங்களுக்கு 1970-7-10-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.
G. P 3371

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் கச்சேரி அண்மையில் மூன்று அறைகளையும் குசினி பண்டசாலைகளையும் கொண்ட வீடு மூன்று பரப்பு ஒன்பது குளி; லான்ட் இன்வெஸ்ற்மென்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம் 3168

காணி:
கிளிநொச்சி பாஸ்கரலிங்கம்ஸ் கட்டிடத்திற்கு கிழக்குப் பக்கத்திலும், கண்டி வீதிக்கு அருகாமையிலுமுள்ள ஒரு ஏக்கர் வயற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. சிதம்பரநாதன் ஆசிரியர், துன்னலை தெற்கு, கரவெட்டி. 3159

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி
மில்க்வைற் ஸ்தாபனத்தார் தமது புத்தக வெளியீட்டு வரிசையில் 20-வது வெளியீடான "பிரார்த்தனைத் தோத்திரங்கள். தேவாரம், கோளறுபதிகம்" என்னும் நூலை ஆனி உத்தரமாகிய இன்று வெளியிடுகின்றனர்.

## நிதி யுதவி

அனலைதீவு, வியாழன்
நாட்டைக் காக்கும் நிதிக்கு அனலைதீவு சதாசிவமகா வித்தியாலய ஆசிரியர்கள் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை உதவ முன்வந்துள்ளனர். அத்தொகையை ஆடிமாதச் சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ளும்படி வடபிரதேச வித்தியாதிபதிக்கு அறிவித்துள்ளார்கள்,


ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
**மாவீரன் ஜெயசீலன்**
(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—ஜெயந்தி


## கேள்வி விளம்பரம்

மானிப்பாய்க் கிராம சபைத் தலைவரினுல் மானிப்பாய்க் கிராமசபை அலுவலகக் கட்டிடமும் மண்டபமும் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ந் திகதி முற்பகல் 11 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது வேலைப் பகுதி, நீர்ப்பாசன இலாகா அல்லது கட்டிடக் கலைஞர்களுடன் ரூபா 50,000/-க்குக் குறையாது பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களே விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள்

1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ந் திகதி பிற்பகல் 3 மணி வரை கேள்விப்பத்திரங்கள் உத்தியோக நேரத்தில் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க உத்தேசித்துள்ள ஒப்பந்தகாரர்கள் பதிவுப் புத்தகங்களை அல்லது அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்விப்பத்திரத்துக்கு ரூபா 10/-ம், பிணைப்பணமாக ரூபா 100/-ம் செலுத்தி விண்ணப்பப்பத்திரங்கள் பெறவேண்டும்.

மேல் விபரங்களை இவ்வலுவலகத்தில் உத்தியோக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் றேட்டு வேலைகளுக்கும், கிணற்று வேலைகளுக்கும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

சி. மார்க்கண்டு,
தலைவர்,
மானிப்பாய்க் கிராமசபை.
மானிப்பாய்க் கிராமசபை அலுவலகம்
ஆனைக்கோட்டை,
5-7-70. 2352

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்தின

மத்தியகல்லூரி

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். மத்தியகல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்குஆரம்பமாகிறது. இந்த விளையாட்டுப்போட்டியை அடுத்து, யாழ். மத்தியகல்லூரியின் பழையமாணவரான திரு.பி. சீவரட்னத்தினுல் கட்டி அன்பளிப்புச் செய்யப்பட்ட 'கிரிக்கெட் ஸ்கோர் போர்ட்' கட்டிடத்தையும் இக்கல்லூரியின் முன்னைஞள் அதிபர் திரு ஏ. ஈ. தம்பர் திறந்து வைப்பார். (தே நி

## கரபந்தாட்டம்

முசலி, வியாழன்
மன்னுர் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சபையினுல் நடாத்தப்படும் கரபந்தாட்ட இறுதிச் சம்பியன் ஆட்டம் நாளை மன்னுர் பட்டினசபைக்கருகாமையில் அமைந்துள்ள கரபந்தாட்ட மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. இறுதியாட்டத்தில் சாதாரணமுறையில் புதுக்குடியிருப்பு ஹனீம் விளையாட்டுக்கழகமும் எருக்கலம்பிட்டி கிறசன்ற் விளையாட்டுக் கழகமும் போட்டியிடுகின்றன.

நெடுந்தீவு

## 10-ம் வட்டார இடைத்தேர்தல்

அல்லைப்பிட்டி, வியாழன்
நெடுந்தீவு கிராமசபையின் 10-ம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தல் நியமனப்பத்திரங்கள் யாழ்ப்பாண தேர்தல் அதிகாரியினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வட்டாரத்தில் திருவாளர்கள் வி. கதிரவேலு, என். லட்சுமணராசா, மார்க்கு மரிசலின் ஆகிய மூவரும் போட்டியிடுகின்றனர்.

## விவேகானந்தசபை 68-வது விழா

கொழும்பு விவேகானந்த சபை ஸ்தாபன 68-வது ஆண்டு விழா இம்மாதம் 13-ந் திகதி கொண்டாடப் படவிருக்கிறது.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 26-ம் திகதி
(10-7-70)

# மதுஒழிப்புக்கு ஆதரவு பெறத்தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி
'யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் நடைபெற்ற தற்கொலைகளுக்கும் வன்செயல்களுக்கும் மது அரக்கனின் ஆட்சியும் காரணமாகின்றது. இளவாலையில் இந்த அபாயங்களை நீக்கும்நோக்கமாக ஆரம்பிக்கப்பட்டதே இளவாலை மதுவிலக்கும் இயக்கமாகும்'.

இவ்வாறு இளவாலை வட்டப்புலத்தில் நடைபெற்ற மதுவிலக்கு இயக்கக் கூட்டத்தில் இயக்கத் தலைவர் திரு ம. அருளப்பு தெரிவித்தார், அவர் தொடர்ந்து பேசும்போது, 'இறைவன் டனைமரங்களைப் படைத்து நம்மை ஆசீர் வதித்துள்ளார். நமது முன்னேர்கள் அதற்குக் கற்பகதருஎன்று பெயருமிட்டுள்ளனர். ஆனுல் நாம் அதனை மதுவுக்காகப் பயன் படுத்துகிறேம். இந்த நிலையை மாற்றி இளைஞர்களையும் பிற் சந்ததியினரையும் காப்பாற்றுதல் கடனுகும். இல்லையெனில் சமூக நல்லொழுக்கமும் பண்பும் அஸ்தமித்து விடும்' என்றுர்.

இக் கூட்டத்தில் குடிப்பழக்கமுடைய முதியவர் சிலர் இனிமேல் குடிப்பழக்தில் ஈடுபடுவதில்லை யென சத்தியப்பிரமாணம் எடுத்தனர். இது சம்பந்தமான இயக்கத்துக்கு அரசியலாரின் துணையைப் பெற வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருவாளர்கள் இ. செபஸ்தியாம்பிள்ளை, ச. ஞானப்பிரகாசம், கி. சூசைப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

# 'மாக்ஸிஸ லெனினிஸ வழியில் செல்வோம்'

மாத்தறை, வியாழன்
இன்று மிகவும் பெரும் பிரச்னையாக இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்நாட்டிலுள்ள சோஷலிச அரசாங்கத்தின் சோஷலிச பொருளாதார அமைப்பாலேயே முடியும் என பொதுவுடமைக் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா கூறினுர்.

உயனவத்தை திறந்த வெளியில் நடந்தபொதுவுடமைக் கட்சிக் கூட்டத்தில் டாக்டர் விக்கிரமசிங்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்நாட்டு ஏழைமக்களுக்கு நாம் பல வாக்குறுதிகளைக் கொடுத்தோம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தோட்டங்களையும் சில நிறுவனங்களையும் தேசியமயமாக்கவேண்டியது அவசியம் இலங்கை சுதந்திரமுடையதாகவும், சிங்களத்தை அரசகருமமொழியாக்கி, மாாக்ஸிச லெனின் வழியில்செல்வேண்டும் இலங்கை மக்கள் இப்பொழுது ஏழ்மையில் வாடுகின்றனர். அவர்கள் ஏழ்மையைப் போக்கி சத்துள்ள உணவு வகைகளை கொடுக்க வேண்டும் அதற்காகவே நாம் பாடுபடுகின்றேம்.

உதவிக்கல்வி அமைச்சர் திரு. பி. வி. துடாவ பேசுகையில் இவ்வரசாங்கம், இந்நாட்டு ஏழைமக்களின் வாழ்வை, வரும் ஐந்து ஆண்டுகளில் சீர் செய்யும் என்றுர் மற்றும்பலர் பேசினர்.

# 'உள்ளூர் ஆசிரியர்கள் அங்கேயே கடமையாற்ற வசதி வேண்டும்'

ஊரதீவு, வியா.
'மக்கள் அரசாங்கம் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை கொடுத்தால் உள்ளூர் ஆட்சி அரசியலில் அவர்களை ஈடுபடாதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் தமது புனிதமான தொண்டின் மூலம் மக்கள் மனதைக் கவரவேண்டும். ஆசிரியர்கள் மனத்திருப்தியுடன் ஆனந்தமாக உள்ளூரில் சேவையாதறும் காலம் வெகுவிரைவில் வரும். உள்ளூர் ஆசிரியர்கள் உள்ளூரிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதே நன்று. உள்ளூர் ஆசிரியர்களைப் பெற்றேர் வெறுப்பது இயல்பு. ஆசிரியர்கள் ஊர் மக்களை அன்பால் பண்பால், நடத்தையால், பொறுப்புணர்ச்சியால் கவர வேண்டும். பெற்றேர் மத்தியில் மதிப்புப்பெற்ற ஆசிரியர்கள் மட்டுமே நிம்மதியாகவும் சிறப்பாகவும் சேவை செய்ய முடியும் வெளியூருக்குச் சென்று கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலவிதமான இன்னல்களை அனுபவிக்கின்றனர் என்பது உண்மை. கணவன் மனைவி பிரிந்துகஷ்டப்படுகிறுர்கள். இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமானுல் உள்ளூர் ஆசிரியர்கள் உள்ளூரில் கடமை செய்ய வசதியளிக்கப்பட வேண்டும்'.

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ இரத்தினம், தீவுப்பகு ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்: அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த கால அரசியல் நிலையில் ஆசிரியர்கள் நிம்மதியாகப் பணிபுரிய முடியவில்லை; ஆனுல் தற்போதைய மக்கள் அரசாங்கம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான சகல வாய்ப்புகளையும் செய்யுமென்பது திண்ணம்.

தீவுப்பகுதிக் கல்வி வளர்ச்சியில் புதிய மறுமலர்ச்சி ஒன்று கட்டாயம் தோன்ற வேண்டும். இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஆசிரியர்கள் சிறிதளவாவது தங்களைத் தியாகம் செய்து மக்கள் புனிதமானவர்களாகவேண்டும். கல்வித்தரம் குறைந்திருக்கும் இந்நாட்களில் ஆசிரியர்களின் தியாகம் அவசியம் அத்துடன் இம்மறுலர்ச்சியைஏற்படுத்துவதற்கு ஆசிரியர்கள் அதிபர்களுடன் ஒத்துழைக்கமுடியாதவர்கள் கஷ்டங்களை விளைவித்துக்கொண்டிராமல் வெளியேறிவிடுவதே அவர்கள் செய்யும் பெருந்தொண்டாகும்.

## இறக்குமதி

பர்மாவிலிருந்து 4000 தொன் துவரம்பருப்பு, 1000 தொன் கடலைப்பருப்பு, 1500 தொன் பாசிப்பயறு ஆகியவற்றை இறக்குமதி செய்ய இலங்கை அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளது இதை விட கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமும். தனியார் துறை வர்த்தகங்களும் மேலும் 3000 தொன் பயறைப் பங்கீடு செய்யும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் ஜெயசீலன்

(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

## இரு கோடுகள்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
நடித்த


## திருமால் பெருமை

இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிறிப்போயா காலை 10-30)

## எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடித்த





344 மீ அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலி பரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-00 இசைப்பயிற்சி 7-00 பாட்டு, 7-15 வயலின், 7-45 திரை கானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

—— ——

## இராணுவ அதிகாரிகள் இடமாற்றம்

பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் உத்தரவின் பேரில் இராணுவத்தை முற்றாக மாற்றி அமைப்பதன் முதற்படியாக இராணுவத்திலுள்ள பத்து உயர்தர அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த திங்கட் கிழமை இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிக்கலை இம்மாற்றம் சம்பந்தமான உத்தரவுகளைப் பிறப்பித்தார்


## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
எம். ஜி. ஆர். — பத்மினி நடித்த

### மன்னாதி மன்னன்

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா நடித்த

### பணக்கார பிள்ளை

(புதிய வெளியீடு!)

## REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya-Pre. Poya 10.30 a.m.
Rod Taylor, Lilly Palmer
in
NOBODY RUNS FOREVER

## MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya-Prepoya 10-30 a.m.
John Wayne
in
TRUE GRIT
(TechniColor)


## இன்றைய பலன்

ஆனி மாதம் 26-ம் திகதி
[10-7-70]

மேஷம்: அவசரமுடிவும் அதன்வழித் துன்பமும். உண்டு. சிலருக்கு ஆயுத பீடைகளும் தாக்கும்.

ரிஷபம்: நினைத்தவை நடக்கும் பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு.

மிதுனம்: உணர்ச்சிப் போராட்டங்கள் இன்றுதலை தூக்கும், எதிர்பராத விதமாக தோல்வி ஏற்படலாம்.

கடகம் பூமிப்பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்.

சிம்மம்: பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும்.

கன்னி: சிந்தனையில் தாக்குதல்கள் உங்களை சிந்திக்க வைக்கும்.

துலாம்: இனிக்கப் பேசி காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்.

விருச்சிகம்: முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத விதமாக தடைகள் ஏற்படலாம், சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு.

தனுசு: நினைத்த காரியத்தில் வெற்றி உண்டு. ஆதரவு பெருகும்.

மகரம்: காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார்.

கும்பம்: வாகனஞ் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும்.

மீனம்; களஸ்திரவழியால் கனிவான சம்பவங்களுக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை





இன்று பெறக்கூடிய சக்திமிகு உடன் செயலாற்றும் ஒக்கிருமிநாசினி காய்கறி, புகையிலை ஆகியவற்றைத் தாக்கும் பீடைகளை ஒழிக்க வல்லது.

**வங்கிகம் இலங்கை லிமிட்டெட்**

சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு
டெலிபோன்: 28333

இரசாயனங்களை நினையுங்கள். லங்கெம்மை நினையுங்கள்.

6½ ஹோஸ் பவர் தொடக்கம் 20 ஹோஸ் பவர் வரையுமுள்ள

ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்

பேக்கின் B 3 மரீன் இன்ஜின் உதிரிப்பாகங்களும்

எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# விஷ்ணுஹாட் வெயர்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம்வீதி (போன்: 34) வல்வெட்டித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் ஊடுருவலைத் தடுக்க தாய்லாந்தில் ராணுவம் உஷார்!

பாங்கொக், ஜூலை 9
தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிலும் முக்கிய இடங்களிலும் ராணுவத்தினர் உஷார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனா. தாய்லாந்துப் பிரதமரின் உத்தரவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் சட்ட விரோத கம்யூனிஸ்ட் கட்சியின் பல உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கம்யூனிஸ்ட்டுகளின் ஊடுருவல் நடந்துகொண்டிருப்பதைத் தடுப்பதற்காக பலர் கைதுசெய்யப்பட்டதுடன் ராணுவத்தினரும் எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே தாய்லாந்துப் பிரதமர் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

தாய்லாந்துப் பிரதமர் வானொலியில் உரைநிகழ்த்துகையில் எல்லைப்புறத்தில் நிலைமை மோசமாக இருக்கிறதென்றும், அதற்கான நடவடிக்கைகளெல்லாம் உடனுக்குடன் எடுக்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் ஊடுருவல் முற்முக ஒழிக்கப்படும்வரை ராணுவத்தினர் எச்சரிக்கை நிலையிலேயே இருப்பர் என்று முப்படைத் தலைவர் அறிவித்தார்

## பிரெஞ்சு அமைச்சருடன் கருணாநிதி சந்திப்பு

பாரிஸ், ஜூலை 9
மேற்கு நாடுகள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி பிரெஞ்சுக் கலாசார மந்திரியை சந்தித்துப் பேசினர்.

பாரிஸில் இம்மாதம் 15-ம், 16-ம், 17-ம் திகதிகளில் நடக்கும் உலகத் தமிழ் ஆராச்ய்சி மகாநாடு சம்பந்தமாக அமைச்சருடன் தமிழக முதல்வர் கலந்துரையாடினர்.

லண்டனிலிருந்து தமிழக முதல்வர் பாரிஸ் செல்வார், தமிழாராய்ச்சி மகாநாட்டை திரு. கருணநிதியே ஆரம்பித்து வைப்பார்.

## மே. ஜெர்மன் கோஷ்டி கிழக்கு செல்கிறது

பொன், ஜூலை 9
இம்மாதமுடிவில் மேற்கு ஜெர்மன் உயர்கோஷ்டியொன்று கிழக்குஜெர்மன் செல்லும் மேற்கு ஜெர்மன் பிரதமர் திரு வில்லி பிராண்ட் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

ஆக்கிரமிப்புத் தடுப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக கிழக்கு ஜெர்மனுடன் பேச்சுவார்த்தை நடத்தவே இக் கோஷ்டி செல்கிறது.

பேச்சுவார்த்தை சுமூகமாகவிருந்தால், தாமும் அங்கு செல்லத் தயாராக இருப்பதாக மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

## 'நிக்ஸன் மௌனத்தைக் கலைக்க வேண்டும்!'

நியூயோர்க் ஜூலை9
தென்வியட்னமில் அரசியல் கைதிகள் படுமோசமாகக் கொடுமைப் படுத்துவது பற்றி அமெரிக்க ஜனதிபதி திரு. றிச்சர்ட் நிக்ஸன் மௌனம் சாதிப்பதுகுறித்து போர்விமர்சகர் செனட்டர் சார்ள்ஸ்கண்டனம்தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் தென்வியட்னமில் போர்க் கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதற்கும் தொடர்பில்லை என்பதனை அமெரிக்க ஜனதிபதி திரு. றிச்சர்ட் நிக்ஸன் பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## எதிர்க்கட்சியின் வேலையே மாற்று அரசு அமைப்பதுதான்

— மொரார்ஜி

## 'திருக்கோவையைத் தமிழர் தினமும் படிக்க வேண்டும்'

### மணிவாசகர் விழாவில் உரை

சித்தன்கேணி, வெள்ளி
"இறைவனிடத்துப் பற்றும் உலகத்தினிடத்துப் பற்றின்மையும் ஒருங்கு காட்டும் சிறப்பு மிக்கது மணிவாசகர் தந்த திருவாசகம் திருவாசகப் பாடல்கள் ஒவ்வொன்றும் பக்திபரவசம் ததும்புவனவாகவும் உலகாக்கட்கு உபதேசமா விளங்குவனவாகவும் மிளிர்கின்றன. மணிவாசகர் தந்த திருக்கோவையாரே எல்லாக் கோவைகளுக்கும் முன்னதாகத் தோன்றியது. ஏனைய கோவைகளுக்கில்லாத சிலச் சிறபும் பக்திச் சிறப்பும் திருக்கோவைக்குண்டு. திருக்குறளைத் தினமும் படிப்பது போல திருக்கோவையையும் தமிழ்மக்கள் படிக்க வேண்டும். மணிவாசகர் இயற்றிய திருவாசகம், திருக்கோவை இரண்டும் படிக்கும் போது பக்திக்கடலில் மூழ்கி விடுகின்றோம். திருவாசகம் கல்நெஞ்சரையும் கரையச் செய்வதனாலேயே 'திருவாசகத்துக் குருகார் ஒருவாசகத்துக்கு முருகார்' என்று பெரியோர்கள் கூறுகின்றனர்"

இவ்வாறு சித்தன்கேணி கலைநகர் இந்து சமயமன்றத்தினர் நெருஜீ சனசமூக நாமங்கள் அமையக்கூடிய பெயர்களை வைப்பதனால் தம்மையறியாமலே இறைவனுடைய நாமத்தைச் சிந்திப்பதாக அமையும். கந்தசாமி என்று தனது மகன் ஒருவனைத் தந்தையோ அல்லது தாயோ அழைக்கின்ற போது தம்மையறியாமலே இறைவனுடைய திருநாமத்தைச் சிந்திக்க முடிகின்றது. இப்படியான பெயர்களை வைப்பது நாகரிகமில்லை என்று கருதி சினிமா நடிகர் நடிகைகளினுடைய பெயர்களை வைத்துக்கொள்கின்றார்கள் அநேகமான பெற்றோர்கள்." எனகொக்குவில் மேற்கு சைவவாலிபர் சங்கத்தினரால் ஸ்ரீ ஞானபண்டிதவித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்ட மணிவாசகர் விழாவிலே உரையாற்றிய நயினை திரு. ஐயாத்துரை சரவணபவ[illegible] குறிப்பிட்டார்

[illegible] ம. சர்வானந்தா தலைமையில் நடைபெற்ற விழா நடந்தது

1969-ம் ஆண்டு சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சமயபாடப் பரீட்சையில் சித்[illegible]டைந்த [illegible] சு சாந்தகுமார். க பத்மநேசன், ம சாந்தினி. மத்

## சதி: ஆயுள்காலத் தண்டனை

ஏதென்ஸ், ஜூலை 9
அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக இராணுவ நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், 3இராணுவத்தினருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. ஏழு பேருக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பதினெராவது நபர் விடுதலைசெய்யப்பட்டார்.

## இத்தாலி அரசியல் நெருக்கடி

### சமரசப் பேச்சு

ரோம், ஜூலை 9
இத்தாலியில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதற்கு ஜனதிபதி சமரசப் பேச்சு வார்த்தைகளை நடாத்துகின்றார்.

கூட்டரசாங்கத்தில் உள்ள இடதுசாரிகளுடன் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இத்தாலியப் பிரதமர் மரியாேனு ரூமர் ராஜினமா செய்தார். இதனைத் தொடர்ந்து இந்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

ஜனதிபதி திரு. மரியானே ரூமருடனும், அவர் கட்சியினருடனும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

## செக்.சமஷ்டிசபை ஏற்றது

பிராக், ஜூலை 9
செக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியிலிருந்து டுப்செக் வெளியேற்றப்பட்டதைச் செக்கோஸ்லவேக்கிய சமஷ்டிச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

## 'ஆசிரிய தொழிற்சங்கத்தின் மானத்தைக் காப்பாற்றினர்கள்'

யாழ்ப்பாணம், வியாழன்
"இன்றைய சமுதாயத்தில் தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபட்டு உழைக்கும் பல விசித்திரமான பேர்வழிகளைக் காண்கின்றோம். தொழில்சங்க அங்கத்தவர்களின் பொது நலன்களை அடைவுவைத்து விட்டுதமது சொந்த நலனையே பெரிதாகக்கருதும் தொழில் சங்கத் தலைவர்களும் எம்மிடையே இல்லாமலில்லை தொழில்சங்க உறுப்பினர்களை ஏணியாக வைத்து தமதுபட்டம் பதவிகளைமாத்திரம் பெற்று உச்ச நிலையடைந்தும் அங்கத்தவர்கள் நன்மைகளை உதாசீனம் செய்பவர்களும் நமது சமுதாயத்தில் பலர் இருக்கிறர்கள் இப்படிப்பட்டவர்கள் மலிந்த இந்தக் காலம் அப்பழுக்கற்ற தொழில்சங்கவாதிகளாக விளங்கும் ஆசிரியர்கள் திரு. சத்தியாம் பிள்ளை, சிவனேசன் போன்றோரும் எம்மிடையேயிருக்கின்றர்கள் என்பதால் ஆசிரியர் உலகம் பெருமையடைகிறது"

இவ்வாறு வலிகாமம் வடக்கு ஆசிரியசங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் திருவாளர்கள் சந்தியாப் பிள்ளை, சிவநேசன் ஆசிரியர்களுக்கான வரவேற்பு உபசார விழாவில் ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன்பேசியபோது கூறினர்:

அவர் தொடர்ந்து கூறியதாவது:- இவ்விரு ஆசிரியர்களும் தொழிற்சங்க உத்தியோகத்தர்களாகவிருந்து ஆசிரிய சம்மேளனத்தினர் கட்டளையைசிரமேற்கொண்டு 'சியவச' சீட்டு விற்பனை செய்யமறுத்ததால் மேலிடத்தாருக்கு வேண்டாத பிள்ளைகளாக விடப்பட்டனர். இதன் பலன் இடமாற்றம் முதலியனதை பொறுமையோடு ஏற்று ஆசிரியதொழில்சங்கமானத்தைக் காப்பாற்றினர்கள்.

இதுவிடயத்தில் தற்போதைய கல்விமந்திரிக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் தொழிற்சங்க ஆரம்ப காலத்தில் உரிமைக்குரல் எழுப்பிய தொழில் சங்க வாதிகள் உயிரையே விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது இந்தநிலை இவ்விரு ஆசிரியர்களுக்கும் இங்கு கிடைக்காமல் போனது ஒருவாறு அதிர்ஷ்டமே

இவ்இழிநிலை நீக்கவேண்டுமானல் முதலில் ஆசிரியனுக்கு அதிகாரிகள் செய்யும் தீங்கை விட ஆசிரியனுக்கு ஆசிரியன் ஒருவன் தீங்கு செய்யும் நிலைமாற வேண்டும் அதிகாரிகளையும் அரசாங்கங்களையும் குறைகூறுவதற்கு முன்னர் ஆசிரிய தொழிற்சங்களில் உள்ள பிழையானவர்களில் நாம் அவதானமாயிருக்க வேண்டும். (கு.வி.ம.)

## சிங்கள தேர்ச்சிப் பரீட்சை

முசலி, வியாழன்
அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை அடுத்த மாதம் 8-ம் திகதியும் 15-ம் திகதியும் நடைபெறுமென்று கல்இலாகாவால்அறிக்கை விடப்பட்டிருக்கின்றது.

## இன்று கூட்டுறவு தின விழா

முசலி, ஞாயிறு
மன்னர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்ஆதரவில்இன்று மன்னர் மாவட்டசர்வதேச கூட்டுறவு தினவிழா உயிலங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவுக்கு மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமை வகிப்பார்.

இந்த சர்வதேச கூட்டுறவுதினவிழாவை யொட்டி பேச்சுப்போட்டிகள். நாடகங்கள், கூட்டுறவு பாட்டுப் போட்டிகள் நடைபெறவ்ருக்கின்றது.

## இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரிய சங்கத்தீர்மானங்கள்

பருத்தித்துறை, வியா
இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க விசேஷ கூட்டம் நேற்று முன்தினம் திரு. வீ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

■ நாட்டைக் காக்கும் நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்குவது

■ சாதாரண பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் விசேஷ அல்லது உயர்தர பயிற்சிபெற்று வெளியேறும் போதே அவருக்கு முதலாம் வகுப்புத் தராதரப் பத்திரம் வழங்கப்படுவதுடன், முன்னைய சேவைக் காலத்திற்கு, பட்டதாரி ஆசிரியருக்கு முன்னர் வழங்கப்பட்டதுபோல் இரண்டு வருடச் சேவைக்கு ஒருபடி உயர்ச்சி வீதம் வழங்கப்படவேண்டும்.

■ இரண்டாம், மூன்றந்தர விசேஷ பதவிகளுக்கும் அதிபர் பதவிகளுக்கும் எமக்கென ஒரு தொகையை ஒதுக்கித்தரவேண்டும்.

மேலும் புதிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மகமூத்திற்கும், புதிய அரசாங்கத்திற்கும் வாழ்த்துச்செய்தி அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது."

போர்ஹார்ஸ்
புன்னகைப் புதிர் போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சியின் வேலையே மாற்று அரசு அமைப்பதுதான்

— மொரார்ஜி

புதுடில்லி, ஜூலை 9 வாய்ப்புக்களைக் கண்டறியும் ரீதியில் தற்போதுதாம் நடாத்தி வரும் அரசியல் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் எதிர்க்கட்சிகளை திறம்பட செயல்படவைக்க வேண்டுமென்பதேயென்று தேர்தல் சின்ன வழக்கின் குறுக்குவிசாரணையின் போது மொரார்ஜி தேசாய் கூறினர்.

மாற்று அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்துடன் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படுகின்றதா என்று கேட்டதற்கு 'எதிர்க்கட்சியின் வேலையே மாற்று அரசு அமைப்பதுதான்' என்று அவர் பதிலளித்தார்.

# 'பூரண சோஷலிஸத்தையே தமிழரசு விரும்புகிறது'

— 'அமிர்'

உடுப்பிட்டி, வியா.

''சோஷலிஷத்தை ஏற்படுத்துவதில் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல நாம் பரிபூரண சோஷலிஷத்தையே நாம் விரும்புகின்ருேம் சுரண்டிவாழும் சமுதாயம் ஒழிய வேண்டும் என்று ஆரம்பகாலம் தொடக்கம் போராடிவருவது தமிழரசுக்கட்சி.

சோஷலிஷத்தைச்சிங்களக் கட்சிகள் கருவியாக்கநாம் விடக்கூடாது. துறைமுகத் தேசியத்தால் 70 வீதம் தமிழர்வேலை இழந்தனர். தேசியமயம் என்ருல் சிங்களமயம் என்றே அர்த்தம். உண்மையான சோஷலிஷம் என்ருல் சமுதாயங்களுக்குஇடையில் சமதர்மம் ஏற்படவேண்டும்''.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும், முன்னுள் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கொற்ருவத்தையில் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் சொன்னதாவது:- ''விடுதலையை எப்பாதையில் போய்ப் பெறவேண்டும் என்று நாம் வழிகாட்டுகின்ருேம். இந்த நாட்டிலே நாம் 2-ந் தரப்பிரஜைகளாக இருக்கமுடியாது. இந்தநாட்டில் இரண்டாம் தரப்பிரஜைகளாக மதிக்கப்படும்

நாம் எமக்குள்ளே சாதி என்ற பெயரில் இரண்டாம் தரப்பிரஜைகளை வைத்திருக்கும்நிலை மாறவேண்டும். சாதிப்பாட்டை ஒழிக்க இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் சம்மதம் தந்து விட்டனர்.

உடுப்பிட்டி எம், பி. திரு கே. ஜெயக்கொடி பேசும் போது தேர்தல் முடிந்த பிறகு கட்சி பேதம் எதற்கு என்ருர். சிறுபான்மைச் சமூக மக்களின் பிரச்னைகளைப் போக்க ஆவனசெய்யப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

இக் கூட்டம் திரு. சி. சிவபாதம் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை எம். பி. திரு. கே, துரைரத்தினம், கி ச. உறுப்பினர் திரு. க. அண்ணமலை முன்னுள் கி. ச. உறுப்பினர் திரு. சி ஆறுமுகம் திருமதிமங்கயர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. க. பரம்சோதி உட்பட வேறுபலரும் பேசினர்.

# இளம் பெண்தற்கொலை

புத்தூர். வியா

அச்சுவேலி இடைக்காடு என்னுமிடத்திலுள்ள 22 வயது இளம் பெண் ஒருவர் நைலோன் கயிற்றினுல் கழுத்தில் சுருக்கிட்டு வீட்டுக்குள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அண்மையில் இங்கு நடைபெற்றுள்ளது.

இவரது கையெழுத்திடப் பட்டகடிதமொன்று பொலிசாருக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தது. இன்னென்று தனது குடும்பத்தவருக்கும் தனது சட்டைக்குள் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: இவரது சகோதரியின் ஆடு இவருடைய தென்னம்பிள்ளையைத் தின்றுவிட்டதாகவும் அந்த ஆட்டைப்பிடித்துக் கட்டும்படிதான் சகோதரியிடம் கூறியதாகவும் அப்பொழுது சகோதரியின் கணவன் பேசத்தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் இதனுல்தான் தற்கொலை செய்வதாகவும் ஆனுல் இதுபற்றி யார்மேலும் சந்தேகிக்க வேண்டாமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்து.

இவரது தமையனுரும், தகப்பனும், சிறியதகப்பனும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். மரணவிசாரணை அதிகாரி புறக்டர் கே. உலகநாதன் மரணவிசாரணை நடத்தினர்.

---

யும் கிரியைச் செய்வதினு லேயே 'திருவாசகத்துக் குருகார் ஒருவாசகத்துக்கு முருகார்' என்று பெரியோர்கள் கூறுகின்றனர்''

இவ்வாறு சித்தன்கேணி கலைநகர் இந்து சமயமன்றத்தினர் நெருஜீ சனசமூக நிலைய முன்றலில் நடாத்திய மாணிக்க வாசகர் குருபூசை விழாவில் தலைமைவகித்துப் பேசிய மன்றத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் கூறினர்.

திரு. வீ. தெய்வேந்திரம் பிள்ளை, நிலையச்செயலாளர் திரு. முருகு. நல்லசேகரம் பிள்ளையின் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்துசமய விருத்திச் சங்கம் மாணிக்கவாசகர் குருபூசை கொண்டாடியது. பண்டிதைசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்

மேற்படி சங்கம் நடாத்தியபேச்சுப் போட்டியில் வெற்யீட்டிய செல்வி செ. கலாராணி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி, செல்வன் க. பேரின்பநாதன் நீர்வை அ. இ. கல்லூரி மாணவன், செல்வி த கௌரி நீர்வை ரே. க. த க. பாடசாலை, செல்வி வ. சசிதேவி நீர்வை ரே. க, த க. பாடசாலை, செல்வி மு, சரோஜினிதேவி நீர்வை அ. இ. கல்லூரி மாணவி ஆகியோருக்குச்சங்கப் போஷகர் திரு. க, வல்லிபுரம் பரிசில்கள் வழங்கினர். விழாச் செயலாளர் த. பரராசசிங்கம் நன்றி கூறினர்,

0 0 0

தாவடி, வியா

'பெற்ருர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இறைவனுடைய

தலைமையில் நடைபெற்ற விழா நடந்தது

1969-ம் ஆண்டு சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சமயபாடப் பரீட்சையில் சித்தியடைந்த மேற்பிரிவு: சு சாந்தகுமார், க பத்மநேசன், ம சாந்தினி. மத்தியபிரிவு: சு ரவீந்திரன், சீ உமாபதி, இ சாந்தகுமார். கீழ்ப்பிரிவு: இ அமிர்தகலா, ந குமாரவேல், இ சசிகலா. ஆரம்ப பிரிவு: க லலிதாதேவி, சு நகுலேலஸ்வரன், சு சிவசுதா, சி அன்னலிங்கம் ஆகியோருக்கும் மற்றும் பல மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன

பண்டிதர் திரு இ இராஜலிங்கம் ஆசிரியர் பரிசுகளை வழங்கினர். திரு சி அன்னலிங்கம் நன்றி கூறினர்.

## மணிவாசர் வாழ்வு

''எவனெருவன் கடவுள் இல்லையென்று கூறிக் கொண்டு திரிகின்ருனே அவனிடத்தும் கடவுள் இருக்கிருர் என்ற கொள்கை மனதின் கண்ணே ஆழ்ந்து பதிந்துதான் இருக்கின்றது. காலத்துக்குககாலம் நாயன்மார்கள்தோன்றி சமயப் பூசல்களை-கறைகளை நீக்கி தங்களால் இயன்ற அளவில் தொண்டாற்றி இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ளார்கள்''

இவ்வாறு கொக்குவில் இந்துக்கல்லூரியில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசையின்போது கலந்துரையாற்றிய, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினர்.

மாணிக்கவாசக சுவாமிகள் நான்கு படிகளில் வாழ்ந்து காட்டியுள்ளார் முதலாவது பிரபஞ்ச வாழ்க்கை, அடுத்தவை அடியாருக வாழ்ந்த வாழ்க்கை, கடவுள் தொண்டருக வாழ்ந்த வாழ்க்கை. இரண்டறக் கலந்த வாழ்க்கை. இப்படியாக நாங்களும் உய்யவேண்டியே வாழ்ந்துகாட்டிப் போந்துள்ளார். மனிதனுக்குக் கடவுள் உதவி செய்யவேண்டுமென்ருல் இறைபணி செய்தல் வேண்டும்'' என மேலும் பேசிய பண்டிதை குறிப்பிட்டார்.

## ஆண்டு விழா

கொழும்புத்துறை, வியா

அரியாலை திருமகள் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி நாளை பகல் விளையாட்டுப் போட்டிகளும் மாலை உள்ளூர் அழகுராணிப் போட்டியும். ஆண் அழகன் தெரிவும் கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடைபெறும்.


ரூபா 17,650-00

பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.

ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



முதலாவது பரிசு ரூபா 5000-00

இரண்டாவது பரிசு ரூபா 3000-00

மூன்ருவது பரிசு ரூபா 2000-00

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00

ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிருர்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவருதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, மே/பா. மஹாராஜா ஆர்கனேசேஷன் லிமிட்டெட், த. பெ. இல. 319, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனேசேஷன் லிமிட்டெட், ஸெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதையிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்

பெயர்: ..............................

விலாசம்: ..............................


..............................

வியாபாரியின்

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................



ZENITH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வாக்கு

தேசிய வாழ்வுக்குத் தேவையானவைகளை அறியுங்கள் அது இயற்கையாக வளரும் ஆனால் அஃது இப்படித்தான் வளர வேண்டும் என்று யாரும் கட்டளையிட வேண்டாம், — சுவாமி விவேகானந்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 26-ந் திகதி (10-7-70)

## துணிச்சலான நல்ல யோசனை

சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியை இரண்டாவது பாடமாகவும் தமிழ்ப் பிள்ளைக்ளுக்கு சிங்களத்தை இரண்டாவது பாடமாகவும் போதிப்பதன்மூலம் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணலாம்.

இப்படியொரு சிறந்த யோசனையை ஒரு சிங்கள ஆட்சிமன்ற உறுப்பினர் துணிச்சலுடன் தெரிவித்திருக்கிறார் 'பொடிபுத்தா' என்று பெரும்பான்மைச் சமூகத்தினரால் அன்புடன் அழைக்கப்படுபவரான நிக்கவரட்டியாத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு முதியான்சே தென்னக்கூன் தான் இந்தத் துணிச்சல்காரர் நல்ல நோக்கத்துடன் சிறந்த யோசனையைத் தெரிவித்திருக்கும் அவரைப் பாராட்ட வேண்டும்

யோசனை தெரிவித்ததுடன் திருப்தியடையாமல் அவர் அதைச் செயல் படுத்தவும் முனையவேண்டும் செயலில் தமது யோசனையை நிறைவேற்றுவார் என்பது வடக்கிலிருந்து தமிழாசிரியர்களை வடமத்திய மாகாணத்திலுள்ள தமது தொகுதிக்கு வந்து சேவைபுரியும்படி தாம் கோரவிருப்பதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து நம்பக்கூடியதாக இருக்கிறது.

1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்க ஊழியர் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென்று தெரிவித்திருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அதைச் செயல்படுத்தத் தவறிவிட்டனர். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதுதான் அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த தென்பதுதெளிவு இது மற்றவர்களுக்கும் ஒரு பாடம்

இந்தியாவில் பல ராஜ்யங்களிலும் மும்மொழித் திட்டம் வெற்றிகரமாகச் செயல் படிக்கவும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் மொழியுடன் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் சிங்களத்தை மூன்றுவது இஷ்டபாடமாகவும் படிக்க வழிசெய்யலாமென்பதுதான் இந்த இரு தமிழ்க் கட்சிகளும் தெரிவித்திருந்த மும்மொழித் திட்ட யோசனை

தமிழும் சிங்களமும் மூன்றுவது இஷ்ட பாடமாக்கப் பட்டால் தமிழ்ப் பிள்ளைகள் தான் சிங்களத்தைப் படிப்பார்களேயன்றி சிங்களப் பிள்ளைகள் தமிழைப் படிக்க முன்வரமாட்டார்களென்றும் அவர்களுக்கு அது அவசியமில்லையென்றும் வேறுசிலர் கருத்து வெளியிட்டு சிங்கள தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்று கூறினர்!

இந்த யோசனைகள் யாவும் யோசனைகளாகவே இருந்துவிட்டன எதுவும் செயல்படவில்லை.

1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்படுவதற்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரிய பாடசாலைகள் கல்லூரிகளில் சிங்களம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்பட்டு வந்தது பிள்ளைகள் தாமாக விரும்பியே இதைப் படித்து வந்தனர், பெற்றோரும்இதை மகிழ்ச்சியுடன்ஒப்புக் கொண்டனர், இதே சமயம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் தென்னிலங்கையிலுள்ள வேறுசில கல்லூரிகள், பாடசாலைகளிலும் தமிழ் ஒரு பாடமாகப் படிப்பிக்கப் பட்டு வந்தது,

சிங்களம் மட்டும் மசோதா தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மொழிப்பிரச்னையாக மட்டும் இருக்கவில்லை, அது தன்மானப் பிரச்னையாக இருந்தது. இன்றும் அந்த நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை

திரு முதியான்சே தென்னக்கூன் இப்பொழுது தெரிவித்துள்ளயோசனை மீண்டும் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த உதவலாம்' திரு

# காரைநகர் ஈழத்துச் சிதம்பர மகாகும்பாபிஷேக சிறப்பிதழ்

# "எங்கள் நம்பிக்கை"

காரைநகர் சிவன்கோவிலாகிய 'ஈழத்துச் சிதம்பரத்தின்' மகாகும்பாபிஷேகம் என்றதும் என்னுள்ளே பல இனிய நினைவுகள் எழுகின்றன. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு பிரதோஷத்துக் காப்பரிசியின் சுவையாலே கவரப்பட்டுக் கோவிலை நாடிச்சென்ற சிறுவனாக என்னைப் பாவனை செய்துகொள்கிறேன். திருவெம்பாவை, திருவாதிரைத் தினங்களிலே அங்கு நடந்த விழா விமரிசைகளையும், காவடியாட்டங்களையும் பங்குனி உத்தர விழாக்களையும் நினைவிற் கொண்டுவருகையில் அவை மறக்கமுடியாத உயிர்ச் சித்திரங்களாக விரிகின்றன.

இவ்வாறு சிறு பராயத்தில் நாவாலும், கண்ணாலும் வளர்ந்துவந்த ஒரு பற்று, வயதின் முதிர்ச்சியால், சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேசசுவாமி மீது முறுகிய பத்தியாக விளைந்துகொண்டிருக்கிறது. இவ்வேளையில் எமது திருப்பதியின் வரலாற்றினையும் நினையாதிருக்கக் கூடவில்லை. சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து தலயத்திரை செய்யவந்த தினகரன் என்ற பிராமணர் ஒருவர், எங்கள் ஊரிலே வைரவர் கோவில் ஒன்றைத் தாபித்தார். அக்கோவில் அமைந்த இடம் தினகரன் பிட்டி, திண்ணைக்களி என்ற பெயர்களைப் பெற்றது.

இதற்கு ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து வந்த ஆண்டி என்பவர் ஓர் அரசமரத்தின் கீழ் வைரவசூலத்தை நாட்டி வழிபட்டுவந்தார் சில நாட்களுக்குப பின்னர் அரசமரத்தின் தென்கிழக்குத் திசையிலே ஓர் ஒளி தோன்றியது. அந்த ஒளி தோன்றிய இடத்தை ஆண்டி தோண்டியபொழுது அங்கு ஐயனுர் திருவுருவம் ஒன்று காணப்பட்டது. அதனைப் பத்திசிரத்தையோடு எடுத்துவந்து அவர், சூலத்தின் பக்கத்திலே எழுந்தருளப்பண்ணிப் பூசைபுரிந்து வந்தார். அவர் கிண்டிய ஏணியே ஆண்டிக்கேணி. அவர் பூசித்த பெருமானே

திசைகளிலிருந்தும் சைவ அன்பர்கள் வந்து குழுமுகின்றனர். கோவிலின் சூழலிலேமாணிக்கவாசகர்மடாலயமும், சிவாச்சிரமமும் அமைந்து சமயகுரவரும், நாவலரும் வகுத்துச்சென்ற உன்னதமான சைவப்பணியினைச் சிறப்பாகச் செய்துவருகின்றன. மாணிக்கவாசகர் மடாலயத்தில் மாகேசுரபூசை சிறப்பாக நடந்தேறுகிறது. சிவாச்சிரமத்தில் திருமுறைப் பயிற்றல், கூட்டுப்பிரார்த்தனை முதலிய


எமது கோவிலுக்கு ஓர் இராச கோபுரம் கட்டுவதற்கு அத்திவாரம் போடப்பட்டுள்ளது. தேர்த்திருப்பணிக்கான ஆயத்தங்களும் நடக்கின்றன. கோவிலுக்கென்றே விசேட மின்சார விநியோகத்திற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன, வற்றோடு தண்ணீர் வசதி, போக்குவரத்துவசதி, வெளியிடங்களிலிருந்து தரிசனத்திற்காய் வரும் யாத்திரிகர் தங்குவற்கு இட ஒழுங்குகள் முதலி

உலகப் பிரசித்திபெற்ற தேவாலயங்களையும் சைவர்களின் மாபெருங் கோவிலாகிய சிதம்பரத்தையும் நான் தரிசித்துள்ளேன். ஆனால் அவற்றினிடையே நின்ற வேளைகளிலுங்கூட எனது உள்ளத்திலே காரைநகர்ச் சிவன்கோவிலிலே தலைமையிடம் பெற்றுவிளங்கியது. எனது ரத்தத்தில் மாத்திரமன்றி, உயிரிலுஞ் சுவறிவிட்டஇத்திருக்கோவிலுக்கு மேலாக எதையும்நினைப்பது என்னால் முடியாத காரியமாகும். காரைநகர் மக்களாகிய எங்களுக்கு கோவில் என்றால் அது ஈழத்துச்சிதம்பரம்தான். அர்ச்சகர் என்றால் இங்கே பூசைசெய்யும் சிவாசாரியர்தாம்; மணியகாரர் என்றால் இதன் பரிபாலகர்தாம்! எங்கள் ஊரவரின் கல்விச் சிறப்பும், செல்வ வளமும் செயற்றிறமும், சேவவயுணர்வுமெல்லாம், சௌந்தராம்பிகை சமேதசுந்தரேசரின் திருவருளால் அமைந்தவையே என்று நாங்கள் முழுமனதோடு நம்புகிறோம்.

ந. சபாரத்தினம்
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

சைவசமய சாதனைகள் இடம்பெறுகின்றன. ஆண்டுதோறும் திருவெம்பாவை தினங்களிலே மணிவாசகர் விழா எடுக்கப்படுகின்றது. இவற்றால், கோவில் என்பது சமய வழிபாட்டிற்கு மாத்திரமன்றி சமயச் சூழலையும், சமய அறிவையும் வளர்ப்பதாகிய சமுதாயப் பணியினையும் மேற்கொள்ளும் தலைமைப்பீடமாகவும் அமைதல் வேண்டுமென்ற இலட்சியம் செயற்பட வழி பிறக்கின்றது எனலாம்.

யனவும் அவசியதேவைகளாகும். பழைமையின் மரபு பிறழா நன்மைகளோடு புதுமையின் இன்றியமையாத தேவைகளும் கவனிக்கப்பட்டு ஆவன செய்யவேண்டிய கடப்பாடு எமக்குண்டு. பெருகிவரும் பிரசித்திக்கேற்ப, யாத்திரிகர் கூட்டமும் ஆண்டுதோறும் தொகையிலே கூடிவருகின்றது. என்ற உண்மையினை நாம் உள்ளத்திற்கொண்டு ஆவன செய்தல்வேண்டும்.



## ஈழத்துச் சிதம்பர வாழ்த்து

வித்துவான் கி, வா. ஜகந்நாதன்

வளங்கொழிக்கும் இலங்கைமணித் தீவகத்தில் தமிழர்
மலிவடபால் ஓங்கும்
களங்கொழிக்கும் யாழ்ப்பாண நாட்டினிலே
சிதம்பரமாச் சிவனும் சீர்த்தி
உளங் கொழிக்கும் அன்பரெலாம் நினைந்துவழி
படுகின்ற உயர்ந்த கோயில்
குளங் கொழிக்கும் புனலுடைய காரைநகர்த்
திருக்கோயில் குலாவு மன்றே.

சௌந்தரநாயகியுடனே சுந்தரேச் சுரனருளே
தழைக்க மேவிப்
பவந்தருதுன் பங்களெலாம் போகும்வகை
வழிபடுவார் பாலே யாக்கும்
சிவந்திகழும் இப்பதியின் பெருமையினைவிரித்துரைத்
துச் செப்பல் ஆமோ
நவந்திகழும் திருப்பணிசெய் திந்நாளில் பெருஞ்சாந்தி
நடக்கும் என்றார்,


ஆகமத்தின் வழிநின்று கிரியையெலாம் வரன்முறையே
ஆற்றி நன்கு
யாகமுறு சாலையெலாம் அங்குவளர்த் தருள்மனுக்கள்
எங்கும் ஓதி
ஏகனெனும் சிவன்புகழைப் பரப்பியந்தப் பெருஞ்சாந்தி
இயலும் மாதோ.

ஆண்டுபல பலவாக அருள்கொழிக்கும் பெரும்
பண்ணையாக நின்று
நீண்டபுக முடன்ஈழச் சிதம்பரமாம் காரைநகர்
நிலவும்கோயில்
வேண்டுபவர் வேண்டுவன பெறவருளும் திருக்
கோயில் வெய்ய சன்மம்
தாண்டும்வகை செயும்ஓடம் எனப்பொலியும்
ஆலயமாம் தழைத்து வாழி.

## எம். பி.யின் செய்தி

நாம் ஆவலோடெதிர்பார்த்திருந்த காரைநகர் சிவன்கோவிற் (ஈழத்துச் சிதம்பரம்கும்பாபிஷேகம் இன்று (10-7-70ந் திகதி) வெள்ளிக்கிழமை நடைபெறுமென அறிந்து அனந்தம் அடைகின்றோம். இவ்வாலயம் மிகவும் புராதனமானது. மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றும்ஒருங்கே அமையப்பெற்றதும் அடியார்களுக்கு வேண்டியன வேண்டியாங்கு எய்த அருள் புரிந்து வருவதுமான பல சிறப்புகள் பொலிந்துள்ளதென்பது எல்லோரும் அறிந்ததே. திண்ணைபுரத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் கடந்த காலத்தில் அடியார்களை வாழவைத்ததுபோல் எதிர்காலத்திலும் இன்பமாக வாழத் திருவருள் பாலிப்பாராக இம் மகத்தான வைபவம் எல்லாச் சிறப்புக்களும் பொலிந்து இனிது நிறைவேறும்படி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ. தியாகராசா
காரைநகர்.



இன்று!

## இடைக்கால ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டத்தை விளைவிக்கலாமென்றும் சட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த தென்பது தெளிவு இது மற்றவர்களுக்கும் ஒரு பாடம்

இந்தியாவில் பல ராஜ்யங்களிலும் மும்மொழித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது, அந்தப் பிரதேச மொழியுடன் இந்தி அல்லது ஆங்கிலமும் மற்றொரு பிரதேச மொழியும் போதிக்கப்பட்டு வருகின்றன. மும்மொழித் திட்டத்தினுல் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட முடியுமென்று இந்தியாவிலுள்ள பல மாநில மக்களும் நம்புகின்றன.

இங்கும் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மும்மொழித் திட்டம வழிவகுக்குமென்றுதமிழரசுக் கட்சியினரும் தமிழ்க் காங்கிரசினரும் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தனர் சிங்களப் பிள்ளை சிங்களத்துடன் ஆங்கிலத்தை இரண்டாவதுமொழியாகவும் தமிழை மூன்ருவது இஷ்டபாடமாகவும் அந்த நிலையில் பெரும்மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை.

திரு முதியான்சே தென்னக்கூன் இப்பொழுது தெரிவித்துள்ளயோசனை மீண்டும் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த உதவலாம்' திரு முதியான்சே தென்னக்கூனின் இந்த யோசனையை தமிழ்ப் பிரதிநிதிகளும் வரவேற்று நட்புறவு நல்லெண்ணத்தின் அடிப்படையில் நிக்கவரெட்டியாத் தொகுதியிலுள்ள ஒரு பாடசாலைக்குத் தமிழ் ஆசிரியரை அனுப்பவும் அதே சமயம் வடக்கிலுள்ள ஒரு பாடசாலைககு சிங்கள ஆசிரியரை அனுப்பவும் பரீட்சார்த்தமாகவாவது வழிசெய்தால் அது பயனளிககாமல் போகாது.

இது தேசிய ஒற்றுமைக்கு வழிவகுக்கும், அது மட்டுமல்ல மொழிப்பிரச்னைககும் ஒருநல்லமுடிவைக கொண்டு வரும் என்று நம்பலாம்.

## சட்டம் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப் பிரவேசம் நடைபெற்றது. இக்கோவில்களுக்கு இரவிலோ, பகலிலோ, எந்த நேரத்திலும் பொலிசாரின் பாதுகாப்பின்றி சிறுபான்மைத் தமிழர் எவ்வித அச்சமுமின்றி தனியாகச் சென்று வழிபட்டு வருகிருர்கள். இந்த நிலைமை மாவிட்டபுரத்திலும் ஏற்படவேண்டும் பொலிசாரின் பாதுகாப்புடன் கட்டாய ஆலயப்பிரவேசத்திஞல் பலனில்லை. எந்த நாளும் பொலிசார் பாதுகாப்பு அளிக்கமாட்டார்கள். பொலிசார் கோவில் பகுதியிலிருந்து சென்றதும் மீண்டும் பிராயச்சித்தம் செய்யப்பட்டு மாவிட்டபுரத்தில பூசைகள் நடைபெறும். ஒரு வருடத்திற்கு எவ்வித பிரச்னைகளும் இருக்காது. மீண்டும் அடுத்த வருட உற்சவத்தின் போது ஆலயப்பிரவேசப் பிரச்னை தலை தூக்கலாம்

கடந்தவருடம் ஆலயப்பிரவேசம் செய்ததாக அறிவித்த சிறுபான்மை தமிழர் மகாசபையினர் மீண்டும், இவ்வருடம், மாவிட்டபுர ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக முயற்சி எடுத்தனர். அதே போல்தான் இவ் வருடம் ஆலயப்பிரவேசப் செய்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் அடுத்த வருடாந்த உற்சவத்தின் போது மீண்டும் ஆலயப்பிரவேச கோஷத்தை எழுப்புவார்கள். இதனுல் பிரச்னைநீடித்துக் கொண்டே போகும் ஆதலால் ஆதீன கர்த்தாவும் உபயகாரரும் இதற்கொரு நிரந்தர சமாதான தீர்வு கண்டு வருடாந்த உற்சவம் நடைபெறச் செய்யவேண்டும்.

ஆலயப்பிரவேசத்தை சட்டரீதியாகவோ பலாத்காரமாகவோ பொலிசாரின் பாதுகாப்புடனே செய்வது இந்துநாகரிகத்திற்கு முரணனது. சட்டத்தின் உதவியுடனேவன்முறை மூலமோ, சத்தியாக்கிரகம் மூலமோ, ஆலயப்பிரவேசம் நடைபெறுவதை காந்தியடிகள் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆலயப்பிரவேசத்திற்கு மாருக இருப்பவர்களின் மனதை மாற்றி, அவர்கள் சம்மதத்துடன் ஆலயப்பிரவேசம் செய்வதுதான் சரி என்று காந்தியடிகள் எடுத்துக்காட்டியிருக்கிருர்.


## வடபகுதிக்கு விஜயம்

கலாசார உதவி அமைச்சர் திரு. சோமவீரசந்திரஸ்ரீ விரைவில் வடபகுதிக்கு விஜயம் செய்ய விருக்கிருர். வடபிராந்திய சுதந்திரக் கட்சிப் பிரமுகர் திரு. எம் துரைராசா உதவி அமைச்சரை அழைத்திருக்கிருர்.

னைப் பத்திசிரத்தையோடு எடுத்துவந்து அவர், சூலத்தின் பக்கத்திலே எழுந்தருளப்பண்ணிப் பூசைபுரிந்து வந்தார். அவர் கிண்டிய ஏணியே ஆண்டிக்கேணி. அவர் பூசித்த பெருமானே ஆண்டிக்கேணி ஐயனுர். இன்றும் 'இடரினுந் தளரினும்' எம் ஊரவர் 'ஆண்டிக்கேணி ஐயனுரே' என்றே அழைப்பது வழக்கமாக இருந்துவருவதிலிருந்து ஐயனுர் இவர்களின் உள்ளங்களிலே எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கின்ருர் என்ற உண்மை தெரிய வரும்.

மேலும் சில ஆண்டுகள் சென்றன. களபூமியைச் சேர்ந்த அம்பலவி முருகர், ஆண்டியின் நெருங்கிய நண்பராகி அவரின் திருப்பணிகளுக்கு உறுதுணை புரிந்து வந்தார். ஐயனுருக்குத் தனித்ததோர் ஆலயம் அமைக்க விரும்பிய அவர். இம்முயற்சியில் அயராது தளைப்பட்டு ஊராரின் ஒத்துழைப்போடு ஐயனுர் கோவில் சமைத்தார். காலப்போக்கில் அவரே முன்வந்து ஐயனுர்கோவிலுக்கு வடபுறத்திலே சிவாலயம் ஒன்றையும் கட்டினுர். அரசமரத்தின்கீழ் பத்தர்களின் தனிவழிபாட்டிற்கு உரியவராயிருந்து வந்த இறைவனை, ஒரு கிராமத்தின் உயிர்த்துடிப்பு நிறைந்த கூட்டுவழிபாட்டிற்கு உரியவராய் ஆக்கிப் பெருங்கோவில் எழுப்பிய அம்பலவி முருகரின் திருப்பணியை நாம் நன்றியோடு நினைவுகூரல்வேண்டும். அவரோடும், ஆண்டியென்ற பெரியாரோடும் தொடர்புபட்ட வரலாறுகள் மிக அற்புதமானவை. எமது முன்னேரும் நாமும் எம் வருங்காலச் சந்ததியாரும், நினைந்து நினைந்து இறும்பூதெய்த வேண்டியவை.

இன்று 'ஈழத்துச் சிதம்பரம்' நாடறிந்த பெயராகிவிட்டது. இங்கு நடைபெறும் திருவெம்பாவை, திருவாதிரைத் திருவிழாக்களையும், நடேசர் அபிஷேகத்தையும் தரிசிப்பதற்குப் பல



# ஈழத்துச் சிதம்பர மகாகும்பாபிஷேகம்

(வித்துவான் மு. சபாரத்தினம்)

சிதம்பரத்தில் நடராஜப்பெருமானின் தூக்கிய திருவடியைத் துணையெனத் தொழுதால் முத்திகிடைக்கும் என்பது ஆன்ருேர் வாக்கு. எனவேதான் ஐயன் ஆடும் சிதம்பரமே எல்லாத் தலங்களிலும் மேலானதாக சைவநன்மக்களின் உயிர் நிலையமாக திகழ்ந்துவருகின்றது. அத்தகைய சிறப்பமைந்தசிதம்பரத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவரான அம்பலவி முருகர் என்னும் பெரியார். காரைநகரில் திண்ணபுரம் என்னும் இடத்தில் ஆண்டி என்பவரால் வைத்து வழிபாடுசெய்யப்பட்ட ஐயனுர் ஆலயத்தில் சிவனையும் நடராஜப் பெருமானையும் பிரதிட்டை செய்ய எண்ணினுர்

அம்பலவி முருகரின் பக்தி, வைராக்கியத்தினையும், அளப்பெருந் தொண்டினையும் கண்ட ஊரவர்கள் ஆலயத்திருப்பணிக்குப் போதியளவு உதவியளித்தனர். சிவலிங்கத்தைக் கொண்டுவந்து பிரதிட்டை செய்ய விரும்பிய அம்பலவி முருகர் சிதம்பரம் சென்று நடராஜப்பெருமானைப் பூஜித்து பின்னர் அங்குள்ள சிற்பாசாரிசார் ஒருவரிடம் சென்று திருவருட்டுணையால் லிங்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து வாங்கிவந்து நல்லதோர் வேளையில் நான்கு சிவாச்சாரியர்களைக் கொண்டு கும்பாபிஷேகத்தைச் செய்வித்தார். வருடத்தில் ஆனி. மார்கழி ஆகிய இருமாதங்களிலும் உத்தரம், திருவாதிரை என்னும் நட்சத்திரங்களை முக்கியமாகக்கொண்டு சிதம்பரத்தைப் போல திருவிழாக்கள் நடத்தப்பட்டன.

அம்பலவிமுருகரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்திருப்பணியைத் தொடர்ந்து மாசிலாமணியென்னும் பெரியாரும், பின்னர் அரு. சண்முகம் அவர்களும் மகாமண்டபம். உள்மண்டபம் ஆகியவற்றை அமைத்தனர். சில ஆண்டுகளின் முன்பாகப் பல பெரியார்கள் ஒன்றுசேர்ந்து ஆலயத்திருப்பணியைச் செவ்வனே செய்வதற்கு எண்ணி, காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச் சபையைத் தெரிவுசெய்தனர். அச்சபையினரின் இடையருமுயற்சியினுலும் கண்ணியத்தினுலும் சில ஆண்டுகளில் மூன்று இலட்சத்திற்குகமான ரூபாய்களைச் சேர்த்து. மூலஸ்தான வேலைகளையும், அம்மன், பிள்ளையார், சுப்பிரமணியர், நடராசர் ஆகியோரது ஆலயங்களையும் கருங்கல்லால் சிறந்த சிற்பாசாரியார்களைக் கொண்டு பூர்த்தி செய்துள்ளனர் கொழும்பில் உள்ள காரைஅபிவிருத்திச் சபையினரும் ரூபா 12,000 வரையில் நிதி திரட்டித் திருப்பணிக்கு உதவியளித்தனர்.

காலஞ்சென்ற கந்தர் சண்முகம் அவர்களின் ஞாபகார்த்தமாக குமாரி மாலதி தர்மாவின் நடன அரங்கேற்ற மலர் மூலம் சேர்த்த நிதி ரூபா 13,000மும் திருப்பணிக்கு அளிக்கப்பட்டது.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்திற் செய்யபடும் ஒவ்வொரு கிரியைகளும் தத்துவ அடிப்படையில் அமைந்தவை: சிவாகமங்களில்கூறப்படும் கிரியைகளுள் கும்பாபிஷேகக் கிரியையே மிகவும் முக்கியமானது. உலகிலுள்ள அனைத்துயிர்களுக்கும் நலமுண்டாக வேண்டுமென்னும் பெருநோக்கோடு செய்யப்படுவதே 'பெருஞ்சாந்தி' என்னும் கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் என்பதன் பொருள் ''குடத்து நிரை ஆட்டுதல்'' என்பதாகும். இறைவன் அட்டமூர்த்தியாக இருப்பதால் அப்பொருள்கள் எட்டில் மட்டும் அவனது அருள் வெளிப்பாடு எளிதாகக் கிட்டும். இப்பேருண்மையை அடிப்படையாகக் கொண்டே கும்பாபிஷேகம் இடம் பெறுகின்றது. கும்பாபிஷேகத்தில் யாககசாலைள் அதில்யாககுண்டங்கள்வேதிகைகள் அமைத்து, புனித நீர் நிறைந்த குடங்களில் நூல்சுற்றி, மாவிலை, பூ. தேங்காய், தர்பை ஆகிய வற்றைச் சூட்டி சிவாகம விதிப்படி ஓமம், பூசைகளைச் செய்து அக்குடத்து நன்னிரால் விமானம், கோபுரம், திருவுருவங்களுக்கு அபிஷேகஞ் செய்யப்படும். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் திருக்கோவிலிலும், திருவுருவத்திலும் வெளிப்பட்டுநின்று அருள்புரிய வேண்டும் என்னும் அடிப்படையிலேயே கும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தும் அமைந்துள்ளன. சிறப்பாக இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் கும்பாபிஷேகத்தில் ஞானநுபவம் நிறைந்த ஆசாரியர்க இருபதின்மரால் திருவுருவங்கள் பிரதிட்டை செய்யப்படவுள்ளன. இலங்கை வாஞெலிப் பகுதியினரும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதற்கு இசைந்து வந்துள்ளனர். நேரில் தரிசனஞ் செய்ய முடியாமல் மிகவும் தூரத்தில் இருப்பவர்களுக்கு வாஞெலி அஞ்சல் மிகவும் பயன்படும் வேதமந்திரங்களின் ஒலி உலகமெங்கும் வியாபிப்பதன் மூலம் எல்லோரும் இன்புற்று வாழ வழி வகுப்பதாகும்,



## இன்று! மகாகும்பாபிஷேகம்

சித்தன்கேணி, வெள்ளி காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் மகாகும்பாபிஷேகம் இன்று காலை ஆரம்பமாகி நடைபெறும் 6 மணிக்கு மகாபூசையுடன் ஆரம்பிக்கும் இவ்வைபவம் மாலை 8 மணிக்கு நடைபெறும் திருக்கல்யாணம், திருவீதி உலாவுடன் நிறைவுறும். ஆதீன குரு சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்களின் தலைமையில் சர்வபோதகாசிரியர் பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் உட்பட 25 குருக்கள்மார் பிராதிஷ்டா சடங்குகளை நடத்துவர் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்யும்.

காரைநகா.

## இடைக்கால ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டத்தை விளைவிக்கலாமென்றும் சட்ட நீதிமன்றம் பொதுவாக இதில் தலையிடாதென்றும் கூறினுர். நீதிமன்றத்தின் தலையீடு கட்டாயம் தேவையென்று கண்டால் மட்டும் பங்காளிகளின் அத்தியாவசிய நலன்களை பாதுகாக்கவோ நிர்வாகிகள் அதிகாரத்தை துர்ப் பிரயோகம் செய்வதை தடுப்பதற்காகவோ நீதிமன்றம் தலையிடும் என்றும் கூறினுர்.

கம்பெனி நிர்வாகிகளின் தீர்மானத்தை மாற்றியமைக்க பிரேரணை மூலமோ சட்டவிதிகளுக்கு அமைவாவோ வழிவகைகளை மனுதாரர்கள்கையாளலாம்என்றும் நீதிபதி தெரிவித்தார்.



## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி முப்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் புலமை வாய்ந்தவரும், வரலாறு பூகோளம், வானசாஸ்திரம் முதலிய பல துறைகளில் தோய்ந்தவருமான கலாநிதி ஹ. சி. தாவீதடிகள் நாளைக் காலை 9 மணி முதல் 10 மணி வரை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி திறந்த வெளி அரங்கில் சொற்பொழிவாற்றுவார்,

## புதிய பிரிவின் தலைவர்

கைத்தொழில், விஞ்ஞான விவகார அமைச்சின் சட்ட விதிகள் டைரக்டர் திரு. வின் செண்ட் பண்டிதா உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிப்பதற்கான புதிய பிரிவின் தலைவராகக் கடமையாற்றுவார், இப்புதிய பிரிவு விற்பனைவசதி தரக்கட்டுப்பாடுவிநியோகம்ஆகியன பற்றி ஆராயும்.

உ

ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன்கோவில் செளந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி திருவருளால் மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேற வேண்டுகிறோம்.

**S.R.S. ஜவுளி மாளிகை,**

**S. R. S. நெசவு நிலையம் — S. R. செல்லத்துரை,**

216, காங்கேசன்துறை றேட், போன்: 295 யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org